மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (5.2.2007) புதுடில்லியில், மத்திய திட்டக் குழு கூட்டத்தில் ஆற்றிய உரை

+++

மத்திய திட்டக் குழுவின் துணை தலைவர், உறுப்பினர்கள் மற்றும் உயரதிகாரிகளே !

வணக்கம்.

தமிழ்நாட்டின், 2007–2008ஆம் ஆண்டு திட்டத்திற்கான ஒதுக்கீட்டினை முடிவு செய்வதற்காக இங்கே வந்துள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழ்நாட்டின், சுனாமி புனரமைப்பு திட்டத்தினை மறுசீரமைப்பதற்கு முழு உதவியளித்த மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுனாமி புனரமைப்பு திட்டத்தினை மறுசீரமைத்ததால், ராஜீவ் காந்தி தொகுப்பின் கீழ் 22,000 வீடுகள் கட்டுவதற்கான பணிகளைத் தமிழக அரசால் எடுத்துக் கொள்ள முடிந்தது.

பத்தாவது திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ரூ.40,000 கோடிக்கு மாறாக, நாங்கள் பதினோராவது திட்டத்திற்கு மகத்தான திட்ட ஒதுக்கீடாக ரூ.80,000 கோடியினை கோரியுள்ளோம். துரித வளர்ச்சி, சமத்துவம் மற்றும் சமூக நீதியை மையமாகக் கொண்டு தொடர்ந்து எங்களது நடவடிக்கைகள் அமைந்திடும். இருக்கின்ற நிதி ஆதாரங்களைக் கருத்திற் கொண்டு, 2007–2008ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை ரூ.13,500 கோடி என

நிர்ணயித்துள்ளோம். எனினும், மேற்கூறிய தொகையை, மத்திய அரசின் கூடுதல் நிதியுதவியின் மூலம் அதிகரித்து, பதினோராவது ஐந்தாண்டு திட்டத்திற்கு ஒரு வலுவான தொடக்கத்தை ஏற்படுத்திட இயலும் எனக் கருதுகிறேன். ஆகையால், தமிழ் நாட்டிற்கு பெரிய அளவிலான திட்ட ஒதுக்கீட்டை வழங்குவதற்கு, மத்திய திட்டக் குழு, மத்திய நிதியுதவியினை கூடுதலாக உயர்த்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தில், வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிப்பதே, தமிழ்நாட்டின் தலையாய முன்னுரிமையாகும். தமிழ்நாடு, நீர் பற்றாக்குறையுள்ள ஓர் மாநிலமாகும். வேளாண் துறையை முன்னேற்றுவதற்கு நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த போதிலும், நீர்வளத்தைப் பெருக்குவதே எங்கள் முக்கிய பொறுப்பாக அமைந்துள்ளது. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், என்னுடைய உரையில், நதிகளை இணைப்பதின் உடனடி அவசியத்தை வலியுறுத்தியிருந்தேன். தென்தீபகற்ப நதிகளை இணைப்பதின் சாத்தியக் கூறுகளை, மத்திய அரசின் தேசிய நீர்வள மேம்பாட்டு நிறுவனம் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளது. மைய அரசின் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் வாக்களித்தவாறு இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்குரிய தருணம் வந்து விட்டது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போதிய அளவு மத்திய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2007–2008ஆம் ஆண்டிலேயே இத்திட்டத்தினைத் தொடங்குமாறு, மத்திய திட்டக் குழுவினை கேட்டுக் கொள்கிறேன். வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிப்பதற்கும், எதிர்கால சந்ததியினர்

கோடிக்கணக்கானோர் பயன் அடைவதற்கும், மத்திய திட்டக் குழுவால் செயல்படுத்தப்படவிருக்கும் இத்திட்டம் ஒரு முக்கிய பங்களிப்பாக அமையும்.

தமிழக அரசு, ஏழை மக்களுக்காக இலவச சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் இலவச சமையல் அடுப்பு வழங்கும் திட்டத்தினை தொடங்கியுள்ளது. விறகினை பயன்படுத்தி சமைக்கும் போது ஏழைப் பெண்களின் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. இது சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதுடன், மரங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, காற்று மாசுபடுவதையும் அதிகரிக்கின்றது. இத்திட்டம், மகளிர் நலன், அவர்களது சுகாதாரம், சுற்றுச் சூழலை பேணிக் காத்தல் மற்றும் காடு வளர்த்தல் ஆகிய மூன்று முக்கிய தேவைகளை ஒரே நேரத்தில் நிறைவு செய்கிறது. வறுமையை ஒழிப்பதற்கு உகந்த இந்தத் திட்டம் பல்வேறு பயன்களையும் நல்கிடும். இத்திட்டம், மத்திய அரசின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெறுவதற்கு ஏற்றது. தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், ஊரக மின்வசதி, குடிநீர் வழங்கல், சாலைகள், போன்ற துறைகளில் தமிழ் நாடு முன்னேறியுள்ளதால், பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ் எந்தவித நிதியுதவியும் பெறவில்லை என்பதனை நான் ஏற்கனவே தெரிவித்துள்ளேன். எனவே, பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ், இலவச சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் இலவச சமையல் அடுப்பு வழங்கும் திட்டத்தினைச் சேர்த்து தமிழ் நாட்டிற்கு நிதியுதவி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கு, கூடுதலாக மத்திய நிதியுதவியினை வழங்குவதற்கு ஏற்ற கருத்தினை திட்டக் குழு உருவாக்கிட வேண்டும்.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தினைச் சிறந்த முறையில் செயற்படுத்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நாங்கள் கிராம ஊதிய வீதத்தை திருத்தம் செய்து அறிமுகப்படுத்தியதன் மூலம், ஏழைப் பெண்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் பெறுவதை உறுதி செய்துள்ளோம். இத்திட்டம் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை, தமிழ் நாட்டில் உள்ள மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிக்குமாறு, மத்திய திட்டக்குழுவைக் கேட்டுக் கொள்கிறேன்.

பின்தங்கிய பகுதிகளுக்கான வளர்ச்சி நிதி **(BRGF)** திட்டம் தற்போது, தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களில் நடைபெறுகிறது. பின்தங்கிய மற்றும் மிகவும் வளர்ச்சியடையாத பகுதியான ஒருங்கிணைந்த தர்மபுரி மாவட்டத்தை இந்தத் திட்டத்தின் கீழ் சேர்ப்பது அவசியமாகும். எனவே, தர்மபுரி பகுதியினை பின்தங்கிய பகுதிகளுக்கான வளர்ச்சி நிதியின் கீழ் உடனடியாக சேர்த்து உதவிடுமாறு மத்திய திட்டக் குழுவினை கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு, செம்மொழி தமிழுக்கு என மத்திய அரசின் நிறுவனம் ஒன்றினை உருவாக்கிட தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இந்நிறுவனத்தை சென்னையில் நிறுவிட, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் அவர்கள் கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளார். இதற்காக, 2007–2008ஆம்

ஆண்டில், கூடுதல் மத்திய நிதியுதவியினை வழங்குமாறு மத்திய திட்டக் குழுவை கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு, தொடக்கக்கல்வியில் துரித வளர்ச்சியடைந்துள்ளது. இப்போது, இடைநிலைக் கல்வி அனைவருக்கும் கிடைப்பதற்கு முக்கிய கவனம் செலுத்துகிறோம். தமிழ்நாட்டின் உயர்நிலைக் கல்வியின் வளர்ச்சிக்கு நிதியுதவி வழங்குவதற்கு ஏதுவாக சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தினை விரிவுபடுத்திட வேண்டுமென்று மத்திய திட்டக்குழுவினை கேட்டுக் கொள்கிறேன்.

கிராம வீட்டு வசதிக்கு, பெருமளவில் மத்திய நிதியுதவி தேவைப்படுகிறது. இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், ஒவ்வோராண்டும் 61 ஆயிரம் வீடுகள் மட்டுமே கட்டப்பட்டு வருகின்றன. நிரந்தர வீடுகள் அதிக அளவில் தேவைப்படும் கிராம மக்களுக்கு, இந்த எண்ணிக்கை மிகக் குறைவானதே. எனவே, இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மத்திய நிதியுதவியினைப் பெருமளவில் அதிகரித்துத்தரும்படி மத்திய திட்டக் குழுவை கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குவதில் தமிழ் நாடு முன்னோடியாக விளங்குகிறது. தேசிய சமூக உதவித் திட்டம், குறைந்த அளவிலேயே பயன்தருகிறது. ஊனமுற்றோர், கைம்பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்கள் ஆகியோர் பயனடையும் வகையில் தேசிய சமூக உதவித் திட்டத்தினை விரிவுபடுத்திட வேண்டுமென மத்திய திட்டக் குழுவினை கேட்டுக் கொள்கிறேன்.

திட்டச் செயல்முறையைப் பற்றி ஒரு சில கருத்துகளை எடுத்துரைத்து எனது உரையை நிறைவு செய்திட விரும்புகிறேன். தற்போது, தனித்தனி நெறிமுறைகள் மற்றும் விதிமுறைகளைக் கொண்ட, மத்திய அரசு பொறுப்பேற்கும் ஏராளமான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இது, திட்டம் மற்றும் வளர்ச்சி செயல் முறையை மட்டுப்படுத்துகிறது; கடினமாக்குகிறது; மற்றும் நிர்வாகச் செலவை அதிகரிக்கிறது. மத்திய அரசு பொறுப்பேற்கும் ஏராளமான திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, மாநிலங்களின் தேவைகளுக்கேற்ப, இத்திட்டங்களை இணக்கமும் நெகிழ்ச்சித் தன்மையும் உடையதாக்கிடுமாறு மத்திய திட்டக் குழுவினை வலியுறுத்துகிறேன். தேசிய வளர்ச்சிக் குழுவில் ஏற்கனவே நான் தெரிவித்துள்ளவாறு, திட்ட ஆய்வு முறையையும் மற்றும் மாநில திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கும் முறையையும் எளிதாக்கிட வேண்டும் என விரும்புகிறேன். தற்போதுள்ள நடைமுறை, எளிதில் கையாள முடியாத, மிகவும் பழைமையான காலத்திற்கொவ்வாததாகவே உள்ளது.

உங்களிடமிருந்து முழுமையான உதவியையும், நிறைவான ஒத்துழைப்பையும் நான் எதிர்பார்க்கிறேன்.

*****